# இளைஞர் அணி சமூக வலைதள மாவட்டத் துணை அமைப்பாளர் பொறுப்புக்கு

## கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு ஆகிய மாவட்டங்களுக்கான நேர்காணல்!

## தி.மு.க. இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!

















இயக்கத்தின் முதன்மை அணியாம் கழக இளைஞர் அணி நிர்வாகிகளுக்கு, சமூக வலைதளப் பயிற்சியளிக்கவும் அவர்களின் சமூக வலைதளம் சார்ந்த பணிகளை ஒருங்கிணைக்கவும் தலைமைக்கழகத்தின் ஒப்புதலுடன், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலில், கழக மாவட்டத்துக்கு ஒருவர் என அனைத்து மாவட்டங்களிலும் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர். கழக மாவட்ட வாரியாக அவர்களை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் நேர்காணல் செய்து வருகிறார். அந்த வகையில், நேற்று முன்தினம் (21.06.2025) கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு மற்றும் கள்ளக்குறிச்சி வடக்கு கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட சமூக வலைத்தளத் துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் சகோதரர் ப.அப்துல் மாலிக் முன்னிலையில் நேர்காணல் செய்தார். அவர்களின் சமூக வலைத்தளப் பக்கங்களைப் பார்வையிட்டுஅவர்கள் இதுவரை ஆற்றியுள்ள கழகப் பணிகள் குறித்து கேட்டறிந்ததுடன், அவர்கள் கொண்டு வந்திருந்த ஆவணத் தொகுப்புகளையும் ஆய்வு செய்து, கழக பணி சிறக்க வாழ்த்தினார்.

### சிவகங்கை மாவட்ட செயற்குழுக் கூட்டம்! கழகத்தில் உள்ள அனைத்து அணிகளும்

# ஒன்றுபட்டு பணியாற்றினால் தேர்தலில் 100% வெற்றியை பெறலாம்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!



*சிவகங்கை, ஜூன் 23-*

சிவகங்கை மாவட்ட கழக செயற்குழு கூட்டம் காரைக்குடியில் தலைவர் கலைஞர் பவளவிழா மாளிகையில் பசும்பொன் தா. கிருட்டிணன் அரங்கத்தில் மாவட்ட அவை தலைவர் வழக்கறிஞர் அ. கணேசன் தலைமையில் முன்னாள் அமைச்சர் மு.தென்னவன முன்னிலையில் நடைபெற்றது .மாவட்ட கழக துணை செயலாளர் த.சேங்கை மாறன் வரவேற்றுப் பேசினார். இந்த கூட்டத்தில் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம். எல் .ஏ. சட்ட மன்ற தொகுதி பார்வையாளர்கள் முன்னாள் அமைச்சர் டாக்டர் சுந்தர் ராஜ் ,முன்னாள் எம்.எல்.ஏ .கே .முருக வேல் , மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் சசிவர்ணம் ஆகியோர் பேசினார்கள். இந்த கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டுறவுத் துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் கேஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது,

நம்முடைய மாவட்டத்தில் இம்மாதம் 17ஆம் தேதி துணை முதல்வர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சுற்றுப்பயணம் செய்தார். அரசு நிகழ்ச்சிகள் மற்றும் அனைத்து அணிகளின் நிர்வாகிகளை சந்தித்து பேசினார்.

இந்த நிகழ்ச்சி சிறப்பாக அமைந்தது. துணை முதலமைச்சர் மகிழ்ச்சியுடன் வந்தார் மிகுந்த மகிழ்ச்சியுடன் திரும்பி சென்றார். அதற்காக அனைத்து நிர்வாகிகளுக்கும் மாவட்ட கழகத்தின் சார்பில் பாராட்டினை நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். கழக தலைவர் முதல்வர் ,துணை முதல்வர் ஆலோசனையின் படி நாம் ஒன்றுபட்டு அனைத்து அணிகளும் தேர்தல் பணியாற்றினால் 100 சதவீதம் வெற்றி பெற முடியும் . தலைமைக் கழகம் இடும் கட்டளையை நாம் உடனடியாக நிறைவேற்றி அதை செயல்படுத்திட வேண்டும் .தேர்தல் பணி காலங்களில் தகவல் தொழில்நுட்ப அணியின் பங்கு சிறப்பானதாக அமைந்துள்ளது. அந்தப் பணி சிறப்பாக அமைந்திட அவர்களுக்கு நாம் உறுதுணையாக செயல்பட வேண்டும். இந்தியாவிலேயே. உள் ள அரசியல் கட்சிகளில் தமிழகத்தில் தான் கழகம் முழுமையான அளவு மக்கள் பணி ஆற்றுகின்றது. வேறு ஒரு எந்த இயக்கமும் இத்தகைய பணியாற்ற வில்லை. நாம். அவ்வாறு பணியாற்றுவதால் மக்கள் பலன் அடைகிறார்கள்.ஏழாவது முறையாக கழகம் ஆட்சி அமைய வேண்டும். இரண்டாம் முறையாக நம்முடைய தலைவர் தளபதி அவர்கள் முதல்வராக வர வேண்டும். இதை நாம் சபதமாக எடுத்து தேர்தல் பணியாற்ற வேண்டும் .வருகிற 23 24 25 ஆகிய தேதிகளில் இளைஞர் அணி சார்பில் இளம் சொற்பொழிவாளர் கள் பங்கேற்கும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது .அதை நாம் நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் .புதிதாக உறுப்பினர்கள் சேர்க்குமாறு கழக தலைவர் தளபதி அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். அதில் 30 சதவீதம் புதிய உறுப்பினராக இருக்க வேண்டும் என்று ஆணையிட்டுள்ளார்கள் .நாம் அந்தந்த பகுதியில் உறுப்பினர் சேர்க்கும் பொழுது கழக அரசின் நாலரை ஆண்டு சாதனைகளை மக்களிடம் விளக்கி கூறி கழகக் கொடியினை ஏந்தி தின்னை பிரச்சாரமாக மேற்கொண்டு நாம் உறுப்பினர் சேர்த்திட வேண்டும் .கழக தலைவர் தளபதி அவர்கள் விரும்பிய 200 தொகுதிகளுக்கு மேலாக நாம் வெற்றி பெற பாடுபட வேண்டும். சிவ கங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்ற தொகுதிகளில் முழுஅளவு வெற்றி பெற்று 100% வெற்றி யினை தளபதி அவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். மொழி ,இனம், கலாச்சாரம், ஆகியவைகள் பாதுகாக்கப்படுவது கழகத்தினால் தான் .அத்தகைய மொழி,இனம் கலாச்சாரம் பாதுகாப்பு தொடர வேண்டுமென்றால் நம்முடைய கழ க ஆட்சி அமைய வேண்டும் .நமது உறுப்பினர் பணியை ஒன்றரை மாதத்திற்குள் குறிப்பிட்ட காலத்தில் சேர்க்க வேண்டும்.

30% புதிய உறுப்பினர் சேர்த்திட வேண்டும். திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றிபெற முடியும் . இதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு அமைச்சர். கே.ஆர். பெரியகருப்பன் பேசினார் .

இந்த கூட்டத்தில் சட்ட மன்ற தொகுதி பொறுப்பாளர்கள் க.சண்முகம் ,கே. ஆர்.என். என். போஸ் மாவட்ட கழக துணை செயலாளர்கள் த.சேங்கை மாறன், திருமதி ஜோன்ஸ் ருசோ முன்னாள் எம்.எல். ஏக்கள் சுப. மதியரசன், எஸ். மாரியப்பன் கென்னடி, செயற்குழு உறுப்பினர் மாநகர மேயர் எஸ். முத்துதுரை, நகர்கழக செயலாளர் கள் சி .எம். துரை. ஆனந்த், பெரி .பாலா , க .பொன்னுச்சாமி பொதுக் குழு உறுப்பினர்கள் கரு. அசோகன், பள்ளத்தூர் கே. எஸ் .ரவி, பி .ஆர், பெருமாள்,பி.டி.ஆர்.முத்து, ஒன்றிய கழக செயலாளர்கள் சுப. சின்னத்துரை, கே. எஸ். ஆனந்த், குன்னக்குடி சுப்பிரமணியன் , நா.நெடுஞ்செழியன் , எஸ் .சண்முக வடிவேல் ,விராமதி மாணிக்கம் பூமணி கே .பாலசுப்பிரமணியன், பி. சேல்வராஜ், திருமலை முத்துராமலிங்கம், எம்.ஜெயராமன், பெ .மந்த காளை, துரை.ராஜாமணி, மா .அண்ணாதுரை, அ.முத்துச்சாமி, ,ஆறு. செல்வராஜன், வே. தமிழ்மாறன் ,கா. வெங்கட்ராமன், ஆர்.எம்.கென்னடி, வே. ஆரோக்கியசாமி, யோக .கிருஷ்ணகுமார், நாகனி ரவி, பூபால சிங்கம்,லெ.மு. ரவிச்சந்திரன்,திருமதி வசந்தி சேங்கை மாறன் , கடம்பசாமி,பேரூர் கழக செயலாளர் கள் ஆர். கார்த்திகேயன், பி.கதிர்வேல், ,ஜெயராமன், நாகூர் கனி, பி.ஏ..நஜ்மதீன் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகனி செந்தில் குமார், துணை அமைப்பாளர்கள் பரணிக்கிட்டு , மகாதீர், மாவட்ட மகளிரணி அமைப்பாளர் திருமதி பவானி கணேசன், மாவட்ட மகளீர் தொண்டரணி அமைப்பாளர் திருமதி ஹேம லதா செந்தில், நிர்வாகிகள் மார்க் ரெட்கமலா,திலகவதி கண்ணன் தெரசா மாவட்ட ஆதி திராவிட நலக்குழு தலைவர் கொத்தமங்கலம் சேது, அமைப்பாளர் சிங்கமுத்து மாவட்ட செய்தி தொடர்பாளர் அ.அயூப்கான், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதி.ராஜ்குமார் மாவட்ட இலக்கிய அணி தலைவர் புலிக்குத்தி சீனிவாசன், நிர்வாகிகள் சன் சுப்பையா, சேவியர் அண்ணாமலை மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

காரைக்குடி மாநகரச் செயலாளர் நா. குணசேகரன் நன்றி கூறினார்.



திண்டுக்கல், இன்டர் லைஃப் ஆன்லஸ் டி எம்எஸ் எஸ் எஸ் தொண்டு நிறுவனத்தின் சார்பில் 125 ஏழை மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்குதல் விழா அலுவலகத்தில் நடைபெற்றதுஆயர் தாமஸ் பால்சாமி நிகழ்ச்சிக்கு தலைமை வகித்தார். ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் இ.பெரியசாமிநிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கினார். நிகழ்ச்சியில் துணை மேயர் ராஜப்பா , மாவட்ட சமூகநல பொறுப்பாளர் த விஜயராணி ஆகியோர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் திருச்சுழி தாலுகா நொச்சிக்குளம் கிராமத்தில் புதிய மினி பேருந்துகளை நிதி சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மற்றுத்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு தொடங்கி வைத்தார். உடன் திருச்சுழி ஒன்றிய திமுக செயலாளர் பொன்னுத்தம்பி இருந்தார்.